Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, NOVEMBER 01, 2024

வெள்ளிக்கிழமை, 01 நவம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 084 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



# ஏப்ரல் வரையிலும் தேங்காய் வீழ்ச்சி

நாட்டில் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை தொடரும் என தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

“கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் தேங்காய் உற்பத்தியில் சடுதியான வீழ்ச்சி காணப்படுகிறது” என அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நயனி ஆராச்சிகே தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “ரணில் இன்னும் தொங்குகிறார்”

## பிரதமர் ஹரிணி கிண்டல்

பொது மக்களால் 17தடவைகள் நிராகரிக்கப்பட்டு தொடர்ச்சியாக பல தேர்தல்களில் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசி ங்கவிடமிருந்து அரசியலமைப்பை கற்க வேண்டுமா? என பிரதமர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பி யுள்ளார்.



தொடர்ச்சி P2



## ஒற்றுமையை விரும்பாதவர்களுக்கு

# மக்கள் பதிலளிப்பர்

■ க.அகரன்

தமிழ் கட்சிகளின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருப்பதை தேர்தலின் பின்னர் பார்க்க முடியும் என்பதுடன் அனுர அரசாங்கமும் சிங்கள தேசிய வாதத்தையே பின் தொடர்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில், வியாழக்கிழமை (31) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.

தமிழ் கட்சிகள் ஒற்றுமை தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள ஆதங்கம் உண்மையானது. அதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

இந்த தேர்தலில் தமிழ் கட்சிகளாகிய நாம் அனைவரும் ஒரு பொதுச்சின்னத்தின் கீழே போட்டியிடுவோம் என்று முயற்சிகளை எடுத்திருந்தோம். அது சாத்தியப்படவில்லை. எனவே அது மன வேதனையை அளிக்கிறது. இருப்பினும் நாம் ஐந்து கட்சிகள் தற்போது ஒன்றாக இருக்கிறோம். ஏனையவர்களையும் உள்ளே கொண்டுவருவதற்கான முயற்சிகளை தொடர்ந்து செய்வோம்.

தொடர்ச்சி P2

# கடற்பரப்புகளில் வானிலை மாறும்

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வானிலை மற்றும் கடல் நிலை, தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் முன்னறிவிப்புப் பிரிவால் வெளியிடப்பட்டது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தொடர்ச்சி P2



## பெண்களுக்கு

# தலிபான் புதிய தடை

ஆப்கானிதானில் பெண்கள் சத்தமாக பிரார்த்தனை செய்வதோ அல்லது மற்ற பெண்களின் முன்பு குர்ஆனை ஓதுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது என்று தலிபான் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் தங்களின் குரல்களை உயர்த்துவதற்கும், வீட்டுக்கு வெளியே தங்களின் முகங்களை காட்டுவதற்கும் தடைவிதிக்கும் அந்நாட்டு அறநெறிச் சட்டங்களில் சமீபத்திய கட்டுப்பாடு இதுவாகும்.

தொடர்ச்சி P2



# “அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கப்படாது”

வறுமையை ஒழிப்பதில் அரசாங்கத்தின் முதன்மை கவனம் செலுத்தப்படும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, நவம்பர் 14ஆம் திகதிக்கு பின்னரான அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கப்படாது என்றார்.

தொடர்ச்சி P2





# பாலின சம்பள இடைவெளியை குறைப்பதற்கு பேச்சுவார்த்தை

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) இலங்கைக்கான பணிப்பாளர் திருமதி. ஜொனி சிம்ப்சன் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று பிரதமர் அலுவலகத்தில் புதன்கிழமை (30) இடம்பெற்றது.

தொழிலாளர் தரநிலைகள், பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக உரையாடலை மேம்படுத்துதல் ஆகிய விடயங்கள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கைக்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கும் இடையிலான ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்த சந்திப்பு அமைந்திருந்தது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிகள் மற்றும் பரஸ்பர உறவுகளைப் பேணுவதற்கு இலங்கை தொழில் அமைச்சு வழங்கிய ஆதரவுக்கு திருமதி சிம்சன் நன்றி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கைது



நுகேகொடை மிரிஹானையில் உள்ள அவரது மனைவி வீட்டில் இலக்கத் தகடுகள் இல்லாத கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கண்டியில் வைத்து, வியாழக்கிழமை (31) கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வததேவின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தேவுக்குச் சொந்தமான மிரிஹான எம்புல்தெனிய சாலாவ வீதியில் அமைந்துள்ள மூன்று மாடி வீடொன்றில் இலக்கத் தகடுகள் இல்லாத சொகுசு கார் ஒன்று இருப்பதாக பொலிஸ் தலைமையகத்திற்கு தகவல் கிடைத்தது.

தொடர்ச்சி P2

# வெள்ளி முதல் பகிஷ்கரிப்போம்

ரயில் நிலைய அதிபர்களின் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது.

பதவி உயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு உள்ளிட்ட சில பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து புதன்கிழமை (30) மாலை முதல் இரவு 10 மணி வரை தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமது கோரிக்கைக்கு இன்றைய தினத்திற்குள் உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் வெள்ளிக்கிழமை (01) மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

# முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தினார்

■ சண்முகம் தவசீலன்

வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் யசோதினி கருணாநிதி முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார் வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சங்கு சின்னத்தில் பெண் வேட்பாளராக களமிறங்கியுள்ள முன்னாள் போராளியான யசோதினி கருணாநிதி, முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலி செலுத்தி தனது தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தார் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் பரப்புரையை முன்னெடுக்க வந்த நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்

தொடர்ச்சி P2



# 20க்கு இல்லையென்றால் 200க்கா கையை தூக்கினார்?




■ வி.ரி. சகாதேவராஜா

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், 20க்கு கை தூக்கிய காரணத்தினால் இம்முறை வேட்புமனுவை தாக்கல் செய்ய அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அப்படி என்றால், பைசல் காசிம் என்ன 200 க்கா கையை தூக்கியவர்? அவருக்கு சீட் வழங்கியது எப்படி? என நல்லாட்சி தேசிய முன்னணியின் ஆதரவு “வி ஆ வண்”( ware one) அமைப்பின் இணைப்பாளர் மொகமட் ரஸ்மின் கேள்வியெழுப்பினார்.

காரைதீவில் உள்ள அம்பாறை ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

நாட்டில் தமிழ் பேசும் சமூகங்கள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறது. இதுவரை இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அவற்றுக்கு எந்த தீர்வையும் காணவில்லை. அரசியலுக்காக பிச்சைக்காரனின் புண் போல அதைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மக்கள் பதிலளிப்பர்

தேர்தலின் பின்னராவது தமிழ் கட்சிகள் இணைந்து செல்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருக்கும். இவ்வாறு மக்கள் பாடம் புகட்டும் போது ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.எனவே மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயல்படுபவர்களை அவர்களே பார்த்துக்கொள்வார்கள்.

கடந்த அரசாங்கத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கமும் புதிய ஜனாதிபதியும் அது தொடர்பான கருத்துக்களை கூறமறுக்கின்றனர். எனவே அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்ட ஊதியம் கூட்டப்பட வேண்டும். எமது கட்சி இதற்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும்.

பாராளுமன்றத் தேர்தலில் ஆசனங்களை கூடுதலாக எடுக்கவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே ஊழல் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என அரசால் காட்டப்படுகிறது. அத்துடன் மாகாணசபை முறைமையை ஒழிக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் குரலாக உள்ளது.குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் இவர்களே. ஆனால் அதை நீக்குவதற்கான சூழலில் அவர்கள் இருப்பது போல் தெரியவில்லை.

இடதுசாரித்துவத்தினை அடித்தளமாக கொண்டு உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று சிங்களதேசிய வாதத்தோடு இணைந்து செயற்படுகின்றது.அந்த வகையில் திடமான ஒரு அரசாங்கம் அமைவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும்.

எனவே நாம் 11 ஆசனங்களை பெறும் போது அதிகாரம் மிக்கவர்களாக இருப்போம். இம்முறை தமிழ்த்தரப்பை புறந்தள்ளி புதிய அரசாங்கத்தை அமைக்க முடியாது. அதனை நிர்ணயிக்கும் சக்தியாக தமிழ்த்தரப்பு இருக்கும். என்றார்

# “ரணில் இன்னும் தொங்குகிறார்”

பொது நிகழ்வொன்றில் உரையாற்றிய பிரதமர் அமரசூரிய, 17 முறை தேர்தலில் தோல்வியடைந்த போதிலும், ரணில் விக்கிரமசிங்க விலகுவதாகத் தெரியவில்லை, மேலும் தனது அரசியல் வாழ்க்கையில் தொங்கிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

“பொதுமக்கள் மாறிவிட்டார்கள், அவரை நிராகரித்துவிட்டார்கள் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை போலும். இருப்பினும், நாங்கள் ஒரு புதிய பயணத்தை தொடங்கியுள்ளோம், ”என்று அவர் கூறினார்.

அரசியலமைப்பின் அடிப்படையானது மக்களின் ஆணையாகும் என சுட்டிக்காட்டிய பிரதமர், இந்த அடிப்படை விடயத்தை புரிந்து கொள்ளாத ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு அரசியலமைப்பை கற்பிக்க முடியும் என கேள்வி எழுப்பினார்.

“அரசியலமைப்பின் அடிப்படைகளை அறிந்த ஒருவர் தேர்தலை ஒத்திவைக்க மாட்டார், அல்லது தேசிய பேரவை அல்லது நீதித்துறையின் முடிவுகளில் தலையிட மாட்டார். அரசியலமைப்பைப் பற்றி எனக்குக் கற்பிக்க குறைந்தபட்சம் இந்த அடிப்படைகளை அவர் அறிந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், ”என்று அவர் கூறினார்.

தமக்கு தான் எல்லாம் தெரியும், மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது எனக் கருதி செயற்பட்ட தலைவர்களின் செயற்பாடுகளினால் இலங்கை நாசமடைந்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தற்போது நாட்டில் இவ்வாறானதொரு அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரிகளின் அனுமதி தேவையில்லை என ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்த கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்த பிரதமர் அமரசூரிய, அது ரணிலின் ஆட்சி முறை எனவும், ஆனால், புதிய அரசாங்கம் அவ்வாறின்றி அது வேறு அணுகுமுறையை பின்பற்றுவதாகவும் தெரிவித்தார்.

“முடிவெடுப்பதற்கு முன், மக்களின் தேவைகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனைகளை நாங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்கிறோம். எங்கள் முடிவுகள் பொதுமக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றன,” என்று அவர் வெளிப்படுத்தினார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் தொடர்பில் முன்னாள் அரசாங்கம் பின்பற்றிய நடைமுறைகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் அண்மையில் முரண்பட்டுள்ளனர்.

முன்னாள் அரசாங்கம் முறையான நடைமுறைகளை பின்பற்றவில்லை என பிரதமர் அமரசூரிய கூறியதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை தீர்மானங்களுக்கு திணைக்கள அதிகாரிகளின் அங்கீகாரம் தேவையில்லை எனவும், அரசியலமைப்பு குறித்து பிரதமருக்கு பயிற்சி தேவையா எனவும் கேள்வி எழுப்பியமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தி னார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் போராளியான யசோதினி கருணாநிதி, “மக்கள் மத்தியில் அன்று மக்களுக்காக போராடிய நான் இன்றும் மக்களுக்காக ஜனநாயக வழியில் பெண்ணாக போராட வந்துள்ளேன் எனவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சங்கு சின்னதுக்கும் இலக்கம் அறுக்கும் வாக்களித்து என்னை பாராளுமன்றம் அனுப்புங்கள் நான் தொடர்ந்து எமது மக்களின் உரிமைகளுக்காக போராடுவேன்” என தெரிவித்தார்.

# தலிபான் புதிய தடை

அங்கு ஏற்கனவே பெண்கள் மூன்றாம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கும், பொது இடங்கள், வேலைக்குச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆப்கனின் கிழக்கு லோகர் பிராந்தியத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடந்த நிகழ்ச்சியில் பேசிய நல்லொழுக்கத்துறை அமைச்சர் காலித் ஹனாஃபி கூறியதாவது: ஒரு வளர்ந்த பெண் குர்ஆனின் வாசகங்களை ஓதுவது, மற்றொரு வளர்ந்த பெண்ணின் முன்பாக சத்தமாக பிரார்த்தனை செய்யவது தடைசெய்யப்பட்டுள்ளது. ‘தக்பிர்’ (அல்லா ஹு அக்பர்) கோஷம் எழுப்பவும் அனுமதி கிடையாது.

அதேபோல் இஸ்லாமிய நம்பிக்கையின் மையமான ‘சுபானுல்லா’ போன்ற வார்த்தைகளையும் உச்சரிக்கக்கூடாது. தொழுகைக்கான அழைப்பு விடுக்க பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. எனவே அவர்கள் பாடல் பாடுவதற்கும் அனுமதி இல்லை” இவ்வாறு அவர் தெரிவித்தார். அவரது கருத்துகள் அமைச்சகத்தின் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு பின்னர் நீக்கப்பட்டது. கடந்த 2021-ம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு தலிபான்கள் நல்லொழுக்கத்தைப் பரப்புவதற்கும், தீமைகளைத் தடுப்பதற்கும் அமைச்சகம் ஒன்றை அமைத்தனர். அப்போது முதல் தலிபான்கள் பிறப்பித்த ஆணைகளை அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. இவை அனைத்தும் பெண்களுக்கு எதிரானதாக அவர்களை சமமற்ற முறையில் நடத்தும் வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக, பெண்கள் சிறுமிகளுக்கு ஆடை கட்டுப்பாடுகள், கல்வி கற்க, வேலைக்குச் செல்லத் தடை, பொது இடங்களுக்கு ஆண்களின் துணையில்லாமல் செல்லவும் தடைவிதித்திருக்கின்றன.

# ஏப்ரல் வரையிலும் தேங்காய் வீழ்ச்சி

உரிய பருவத்தில் மழையின்மை மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு என்பன தென்னை உற்பத்தி குறைவதற்கு வழிவகுத்துள்ளதாக கலாநிதி நயனி ஆராச்சிகே குறிப்பிட்டுள்ளார். இதனால் அடுத்த ஆண்டு ஏப்ரல் வரை, எதிர்பார்த்ததை விட குறைவான விளைச்சலே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் நிலவும் தேங்காய் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்றுமதி நோக்கங்களுக்காக தேங்காய் பருப்பு இறக்குமதி செய்வது தொடர்பான யோசனையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நயனி ஆராச்சிகே தெரிவித்துள்ளார்.

“கொழும்பு தேங்காய் ஒப்சன் ஊடாக குறிப்பிட்ட அளவு தேங்காய் விற்பனை செய்யப்படும் என தெங்கு அபிவிருத்தி அதிகார சபை பரிந்துரைத்துள்ளது.தேங்காய் ஏலத்தை 100 ரூபாவிற்கு நடத்துவதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்காக தேங்காய் பருப்பை இறக்குமதி செய்ய முன்மொழிந்துள்ளோம், ஆனால் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை" என்றார்.

# முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கைது

இதன்படி, மிரிஹான பொலிஸார் நுகேகொட நீதவான் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்து, குறித்த வீட்டிற்குச் சென்று வாகனத்தை சோதனையிட்டனர்.

இலக்கத் தகடு இல்லாத சம்பந்தப்பட்ட கார் கடந்த 26ம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த வீட்டில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியின் தாயார் வசிப்பதாகவும், கடந்த சில நாட்களுக்கு முன்னர் கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த ரத்வத்தேவின் பிரத்தியேக செயலாளர், கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் அந்த காரை தமது வீட்டின் வாகன தரிப்பிடத்திற்கு கொண்டு வந்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும் அவரது மனைவியும் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட இலக்கத் தகடுகள் மற்றும் சாவி இல்லாத அந்த சொகுசு காரை மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுச் செல்ல பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டதாக அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாலின சம்பள இடைவெளியை குறைப்பதற்கு பேச்சுவார்த்தை

பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்களை, குறிப்பாக பெண்களைப் பாதுகாப்பதற்கு தொழிலாளர் சட்டங்களை மீளாய்வு செய்ய வேண்டிய முக்கியமான தேவை மற்றும் பாலின சம்பள இடைவெளியைக் குறைப்பதன் மூலம் பெண்களுக்கு தரமான வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டியதன் தேவை குறித்து இந்த கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது.

இச்சந்திப்பில், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி அசித செனவிரத்ன, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி உள்ளிட்ட இலங்கை அரசின் பிரதிநிதிகள், பிரதமரின் மேலதிக செயலாளர் மகிந்த குணரத்ன, தொழில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பி. வசந்தன் மற்றும் ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பணிப்பாளர் திலினி குணசேகர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# கடற்பரப்புகளில் வானிலை மாறும்

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

# வானிலை முன்னறிவிப்பு

இலங்கைக்கான பொதுவான வானிலை முன்னறிவிப்பு, தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் முன்னறிவிப்புப் பிரிவால் வெளியிடப்பட்டது.

வியாழக்கிழமை (31) முதல் அடுத்த சில நாட்களில் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகல் வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடியசாதகமான நிலைமை உருவாகி வருகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

# “அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கப்படாது”

மாத்தறையில், புதன்கிழமை (30) இடம்பெற்ற மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, அமைச்சர்கள் கொழும்பில் இருந்து செயற்படுவதை விட சமூகங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

“எங்களுக்கு மக்களுடன் நேரடியாக இணைக்கும் அரசாங்கம் தேவை," என்று அவர் கூறினார், தலைவர்கள் தொலைதூரத்தில் இருப்பதை விட உள்ளூர் பிரச்சினைகளை தீர்க்க தங்கள் மாவட்டங்களில் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நவம்பர் 14 க்குப் பிறகு புதிய அமைச்சரவை மற்றும் அரசாங்கத்தை நிறுவுவதற்கான திட்டங்களை அவர் வெளிப்படுத்தினார். “இந்த அரசாங்கம் தனது பணிகளைச் செய்வதற்கு கிராமங்களைச் சென்றடைய வேண்டும், மேலும் கிராமப்புறங்களில் வறுமையை அகற்றுவதே என் முன்னால் உள்ள மிக முக்கியமான பணியாகும்" என்று ஜனாதிபதி திஸாநாயக்க மேலும் கூறினார்.

# 20க்கு இல்லையென்றால், 200க்கா கையை தூக்கினார்?

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் நாட்டிற்கு தரமான தலைவர் அனுர கிடைத்துள்ளார். நாட்டுக்கு தேவையான நல்ல தலைவரை தேர்வு செய்யுங்கள் என்று அன்று அவர் கூறினார். இப்பொழுது கூறுகிறார் உங்களுக்கு தேவையான உங்கள் தலைவர்களை தேர்வு செய்யுங்கள் என்று.அதுதான் உண்மை .

இப்பொழுது பாராளுமன்ற தேர்தல் வந்திருக்கிறது. எமக்கு தேவை உண்மையாக தலைவர்கள். அறுகம்பை சம்பவத்திற்கு இதுவரை யாருமே வாய் திறக்காதது ஏன்? பொத்துவிலில் உள்ள முஷாரப்பே வாய் திறக்கவில்லை. என்ன அனுரவிற்கு பயந்து நிற்கிறீர்களா? அல்லது தமது இருப்பு கேள்விக் குறியாக போகும் என்று நினைக்கிறீர்களா? இவ்வாறு நினைக்கும் இவர்களா? தலைவர்கள் என்று வினவினார்.

கடந்த காலங்களில் எமது தலைவர்களாக இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை உலகறியும். தயவுசெய்து சமூகத்துக்கு உதவி செய்ய வேண்டுமாக இருந்தால் இந்த போட்டியில் இருந்து ஒதுங்கி கொள்வது நல்லது .புதிய முகங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

சமூகத்துக்கு முழுக்க முழுக்க அசிங்கத்தை அள்ளித்தந்தவர்கள் எமது இஸ்லாமிய தலைவர்கள் . ஜனாஸா எரிப்பிற்கு துணை போன இவர்கள் இனத்துரோகிகள். ஹக்கீம் 20 வருட காலம் எம்.பி யாக இருந்து சாதித்ததென்ன? 20க்கு கை தூக்கியதன் பலன் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன. அப்போது ஹாபீஸ் நசீர் சொன்னார் 150 பெட்டிகளை எரிக்கப்பட்டன ஜனாஸா இல்லை என்று. அதனையும் ஹக்கீம் கைகட்டி பார்த்துக் கொண்டிருந்தார் இவற்றை எல்லாம் மன்னிக்க முடியாது என்றார்.

ஈஸ்டர் தாக்குதலில் இஸ்லாமிய இளைஞர்கள் 2,500 போர். கைது செய்யப்பட்டார்கள். தலதா மாளிகை முன்பாக பௌத்த பிக்குமார் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதனை அடுத்து முஸ்லிம் எம்.பிக்கள் பதவி பதவி விலகினார்கள். ஆனால், வெறும் 13 நாட்களின் பின்னர் மீண்டும் பதவியேற்றார்கள். எப்படி இவர்களின் நாடகம்?

அவர்களுக்கு அரசியல் அதிகாரம் என்பது சேட் போடுவது மாதிரி. சரி இந்த அதிகாரத்தை வைத்து சமூகத்துக்கு என்ன செய்தார்கள்?

திகன கலவரம், அளுத்கம கலவரம், அக்குரணை கலவரம் நீதி கிடைத்ததா? இல்லை. ஒரு வெள்ள பாதுகாப்பை தானும் ஏற்படுத்த முடிந்ததா? இல்லை . மேடைகளில் குர்ஆன் ஹதீஸ் முழங்குகிறார்கள் . வெட்கமா இல்லையா? என்றும் வினவினார்.

மக்களே இனம் கண்டு இவர்களை விரட்ட வேண்டும் . ஹக்கீம் என்றாவது சமூகத்துக்காக எங்காவது கோட் போட்டுக்கொண்டு நீதிமன்ற போனாரா? இல்லை.

ரணில் போன்றோருக்கு ஆதரவாக மட்டுமே நீதிமன்றம் ஏறினார். அம்பாறை, திகன, அளுத்கம மற்றும் பேருவளை இப்படி முஸ்லிம் சமூகத்துக்காக நீதிமன்றம் ஏறினாரா? இல்லை .

இனியும் மக்களை ஏமாற்ற முடியாது. இவர்களை நார் நாராய் கிழித்து தொங்க விடுவோம். மு.கா சொல்கிறது ஒன்பது இடங்களில் வெல்வோம் என்று.மயில் சொல்கிறது பத்து இடங்களில் வெல்வோம் என்று .

முதலில் முடிந்தால் உங்கள் சொந்த ஆசனத்தை காப்பாற்றிக் கொள்ளுங்கள் பார்க்கலாம் .

எமது நல்லாட்சி தேசிய முன்னணியில் பணம் இல்லை பதவியில்லை.வாகனமில்லை. லஞ்சம் இல்லை, ஊழல் இல்லை.

நாங்கள் இன்று கொழும்பிலிருந்து எங்களுடைய பணத்தில் வந்திருக்கிறோம். எங்களிடம் இருப்பதெல்லாம் உண்மை நேர்மை.

தேசிய ரீதியில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் பிராந்தி ரீதியிலும் அத்தகைய மாற்றம் தேவை. எனவே இந்த பழைய ஏமாற்றுப் பேர்வழிகள் இனத் துரோகிகள் அனைவரையும் துரத்தியடித்து புதிய நல்ல முகங்களைத் தேர்ந்து ஊழலற்ற அரசாங்கத்தை ஏற்படுத்த மக்களே நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# “மூன்றுக்கு முன்னேறுகிறது”

எம்.எப்.றிபாஸ்

பொத்துத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை பெறக்கூடிய நிலைக்கு முன்னேறி வருவதாக நிகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூன்றாம் இலக்க வேட்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான சிராஸ் மீராசாஹீப் தெரிவித்தார்.

கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் சாய்ந்தமருதில் புதன்கிழமை (30) நடைபெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு அவர் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் முதல்வராகவிருந்து மக்கள் பணி எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு உதாரணமாக பிரதேச வேறுபாடுகளின்றி மக்களுக்கு தேவையான விடயங்களை இனம் கண்டு சேவையாற்றியவன் என்ற வகையில் இந்த பாராளுமன்றத் தேர்தலில் நானும் ஒரு வேட்பாளராக களமிறங்கியுள்ளேன் பாராளுமன்றத்திற்கு புதுமுக வேட்பாளராகவிருந்தாலும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுமாகயிருந்தால் ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக நான் செயல்பட திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

மக்கள் வாக்குகளைப் பெற்று சுகபோகம் அனுபவிக்கின்றவர்களுக்கு மத்தியிலிருந்து அவர்களது வாக்குகளால் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய ஒருவனாக இந்தப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறுமானால் செய்து காட்ட தயாராகவுள்ளேன். ஊழலற்ற நேர்மையான ஒருவனாக



இந்த அரசியல் களத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்ற நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கின்றவனாகவும் மக்களது தேவைகளை இனம் கண்டு அபிவிருத்திகளின் பால் நமது பிரதேசத்தை ஈர்க்கின்ற ஒருவனாகவும் சர்வதேசம் தொடக்கம் தேசிய ரீதியில் பல்வேறு தரப்பினருடனும் தொடர்புகளை வைத்துள்ள என்னால் பல விடயங்களை மக்களுக்காக செய்து காட்ட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அந்த வகையில் சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் திறமையான நேர்மையான வேட்பாளர்கள் தேர்தலில் களமிறக்கப்பட்டிருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றியை உறுதி செய்வதோடு மூன்றாம் இலக்க வேட்பாளரான எனக்கும் மரச் சின்னத்துக்கும் வாக்களித்து நமக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து கொள்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

ஹெரோயின் போதைப் பொருட்களை வைத்திருந்த நபர் ஒருவர் மருதானை, ஜே.ஈ.குணசேகர வீதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

குறித்த நபரை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 50 இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய , 505 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பாறை குழிக்குள் கார்: குடும்பஸ்தர் மரணம்

சுமார் 60 அடி ஆழமான பாறை குழிக்குள் காரொன்று விழுந்ததில் அந்த காரை செலுத்திச் சென்ற கு டும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் வியாழக்கிழமை (31) அதிகாலை ஆனமடுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. ஆனமடுவ தோணிகல ஒருகல பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய சமிந்த உபுல் குமார என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது காரில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது கார், வழுக்கி சென்று ஆழமான பாறை குழிக்குள் விழுந்துள்ளது. விபத்தில் உயிரிழந்த நபர் விவசாயி என தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இரு தரப்பினரும் வலியுறுத்தினர்

இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் டாமியானோ பிராங்கோவிக் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை புதன்கிழமை (30) சந்தித்தார். இச்சந்திப்பில் இத்தாலிக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகள் மீள உறுதிப்படுத்தப்பட்டதுடன், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முக்கிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில் இத்தாலியில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் குறிப்பாக பயிற்றப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கமுடியுமான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. தொழில் பயிற்சி அதிகார சபையின் ஊடாக இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் முக்கியத்துவத்தை பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

சுற்றுலாப் பயணிகளையும் முதலீட்டாளர்களையும் ஈர்க்கும் வகையிலான கொள்கை உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தியதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்தகைய முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பங்களிப்பு குறித்து விசேடமாக குறிப்பிடப்பட்டது.

இந்த சந்திப்பில், இத்தாலிய தூதரகத்தின் பிரதித் தூதுக்குழுத் தலைவர் கலாநிதி எல்பர்டோ அர்சிடியாகோனோ மற்றும் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க பிரிவின் பணிப்பாளர் இசுரிகா கருணாரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.



## யாழில் இருவர் கைது

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியில் ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் இருவர் சந்தேகத்தின் பேரில், புதன்கிழமை (30) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த, 26 மற்றும் 32 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் 10 போதை மாத்திரைகளுடனும், மற்றையவர் 120 மில்லிக்கிராம் ஹெரோயினுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு

## மாபெரும் விளையாட்டு திருவிழா










பாறுக் ஷிஹான்

மாணவர்களிடத்திலே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (MWRAF) ஏற்பாட்டிலும் டயக்கோனியா (Diakonia) அமைப்பின் ஆதரவிலும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம். நிசாத் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் விளையாட்டு திருவிழா கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை (30) மாலை ஆரம்பமானது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ். ஆர் இஸ்ஸதீன் அவர்கள் கலந்து கொண்டதோடு கௌரவ அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம் ஜாபீர் விசேட அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம் முதர்ரிஸ் மற்றும் இந்நிகழ்வுக்கு பொறுப்பான முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின்(MWRAF) நிறைவேற்று பணிப்பாளர் எயன் ஜப்பார், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் லைலா உடையார், நிதி உத்தியோகத்தர் குமுது பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் கல்முனைக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஏழு பாடசாலைகளின் அதிபர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் பலர் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இவ் விளையாட்டுத் திருவிழாவில் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதோடு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு நினைவுச் சின்னங்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர் இஸ்ஸதீனை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் வந்திருந்த அதிதிகள் அனைவரும் இணைந்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.






கம்பனி பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) விதிகளுக்கு அமைய 2024 ஒக்டோபர் 09ஆம் திகதி தொடக்கம் கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

முன்னைய பெயர்: அப்பீல்ட் லங்கா (பிரைவேட்) லிமிடெட்.
புதிய பெயர்: புளோரா பூட் மெனேஜ்மன்ட் லங்கா (பிரைவேட்) லிமிடெட்.
கம்பனி இலக்கம்: PV 00200304
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: இல.8 ரொஸ்மீட் பிளேஸ், கொழும்பு-7
கம்பனி செயலாளர்கள்
கோப்பரேட் எட்வைஸரி சேர்விஸஸ் (பிரை) லிமிடெட்.

கம்பனி பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) விதிகளுக்கு அமைய 2024 ஒக்டோபர் 09ஆம் திகதி தொடக்கம் கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

முன்னைய பெயர்: அப்பீல்ட் லங்கா சேல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.
புதிய பெயர்: புளோரா பூட் லங்கா (பிரைவேட்) லிமிடெட்.
கம்பனி இலக்கம்: PV 00200530
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: இல.8 ரொஸ்மீட் பிளேஸ், கொழும்பு-7
கம்பனி செயலாளர்கள்
கோப்பரேட் எட்வைஸரி சேர்விஸஸ் (பிரை) லிமிடெட்.

கம்பஹா பிரதேச சபை

விலைமனுக்கள் விளம்பரம்

1. கம்பஹா பிரதேச சபைக்கு சொந்தமான மிட்சுபிஷி எல்-200 வண்டிக்கு புதிய இயந்திரம், முன் பக்க கெபின் மற்றும் பின்பக்க களஞ்சிய பெட்டி விநியோகிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் மற்றும் பிற பழுதுபார்ப்புகளை மேற்கொள்வதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் அனுபவமுள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது. அந்த விலைமனு விண்ணப்பத்தை அசல் மற்றும் நகலாக தயாரிக்கப்பட்ட 02 ஐ 2024.11.22 ஆம் திகதி அன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பதிவு தபாலில் அனுப்பலாம் அல்லது கையில் கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஏலப் பெட்டியல் இட முடியும் அல்லது சமர்ப்பிக்க முடியும். இதற்கான ஏல ஆவணங்கள் 2024.11.01 ஆம் திகதி முதல் 2024.11.21 ஆம் திகதி வரை உள்ள வேலை நாட்களில் கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் சரிபார்க்க முடியும்.

2. விலைமனுக்கள் திறப்பது கூறப்பட்ட ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும், அந்த நேரத்தில் நீங்கள் அல்லது உங்கள் மூலம் எழுத்துமூலம் அனுமதியைப் பெற்ற பிரதிநிதி இந்த நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

3. 2024.11.01 ஆம் திகதி முதல் 2024.11.21 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை திரும்பப்பெற முடியாத கட்டணமாக ரூ.1000.00 ஐ இந்த அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

4. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “வாகனங்கள் பழுதுபார்ப்பதற்கான கட்டணங்கள்” என்று குறிப்பிடப்பட வேண்டும்.

5. பழுதுபார்க்கும் வேலை தொடர்பான பில்கள் பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மட்டுமே தீர்வு செய்யப்படும்.

6. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஏலத் தொகையின் 1ூ மதிப்பிற்கு சமமான வங்கி உத்தரவாதத்தை (டீஐனு டீழுனே) சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

7. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு ஏலங்களை ஏற்க அல்லது நிராகரிக்க அதிகாரம் உள்ளது.

8. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு தேவையான சந்தர்ப்பங்களில் விலையை திரும்பப் பெறும் அதிகாரமும் உள்ளது.

2024.10.30 ஆம் திகதி

**கம்பஹா பிரதேச சபை மூலம்**
**தொலைபேசி இல: 033 22 22020 – 033 22 20145**

**எஸ். ஏ.என்.பீ.சூரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை**
**அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை.**

# ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சலை தடுப்பதற்கு வாருங்கள்

இருக்கும் தொற்றுநோய்களுக்கு மேலதிகமாக, பன்றிகளைத் தாக்கும் 'ஆப்பிரிக்கன் பன்றிக் காய்ச்சல்' (ASF) எனும் வைரஸ் நோய் தற்போது இலங்கைக்கு வந்துள்ளது. ஆபிரிக்காவில் பரவிய இந்நோய் வான் வழியாகவா அல்லது கடல் வழியாகவா இலங்கைக்கு வந்தது என்ற கேள்வி உள்ளது. எவ்வாறாயினும், இந்நோய் தற்போது இலங்கையைத் தாக்கியுள்ளது.

விலங்குகள் ஆரோக்கியத்திற்கான உலக அமைப்பு (WOAH) இந்த நோயை காட்டு மற்றும் வீட்டுப் பன்றிகளை பாதிக்கும் ஓர் ஆபத்தான நோயாக அங்கீகரித்துள்ளது, மேலும் அவர்கள் இந்த நோயிலிருந்து உலகளாவிய பன்றி தொழில் மற்றும் பல்லுயிரியலைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர்.

நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கூறுகையில்,

பல இடங்களில் பதிவாகும் இந்த தொற்றுநோயை சமாளிக்க நாடு உடனடியாகத் தயாராகிவிட்டது. இதன்படி, பன்றிகள் அல்லது பன்றி இறைச்சி தொடர்பான பொருட்கள் மூலம் நோய் பரவுவதை தடுக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தலை திணைக்களம் வெளியிட்டு அது தொடர்பான அளவுகோல்களை முன்வைத்துள்ளது.

இவ்வாறு, அதற்கான சட்டப் பின்னணி அமைக்கப்பட்டுள்ளது, ஆனால் நோய்வாய்ப்பட்ட பன்றிகள் மற்றும் நோயுற்ற இறைச்சிப் பொருட்களின் புழக்கத்தைத் தடுக்க வணிகர்கள் உட்பட மக்களின் ஆதரவை வழங்குவது இந்த தருணத்தில் நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய பணியாகும்.

நாடு மற்றும் நுகர்வு தடுக்க. நாட்டின் சமயப் பின்னணியின்படி ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இறைச்சி நுகர்வு குறைவு என்பது உண்மையே. மேலும், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் மத்தியில் பன்றி இறைச்சி நுகர்வு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. முஸ்லிம்கள் நுகர்வோர் அல்ல.

பெரும்பாலான பன்றி வர்த்தகம் மற்றும் நுகர்வு மேற்கு, வடமேற்கு மற்றும் வட- மத்திய பகுதிகளில் உள்ளது, ஆனால் நாட்டின் மற்ற அனைத்து பகுதிகளிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நுகர்வு உள்ளது. இதனால், நாடு முழுவதும் பன்றிக்காய்ச்சல் பரவுவதற்கான அதிகாரப்பூர்வமற்ற வாய்ப்பு உள்ளது. இப்போது அதற்கு மூன்று மாதக் கட்டுப்பாடு விதித்துள்ளதால், புழக்கத்தின் மூலம் நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் பூஜ்ஜியத்திற்குச் செல்லவில்லை என்பதால் இதைச் சொல்கிறோம்.

பன்றி இறைச்சி தொழில் என்பது பல குடும்பங்களுக்கு வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை வழங்கும் ஒரு தொழில் என்பது உண்மைதான். ஆனால் இந்த திடீர் சரிவால் இவர்கள் அனைவரின் வாழ்க்கையும் கொஞ்சம் கொஞ்சமாக நின்று போனது உண்மைதான். இலங்கையில் கோழி இறைச்சியை உண்பவர்களும் இறைச்சி உண்பதை மட்டுப்படுத்துவதால் 'பறவைக் காய்ச்சல்' என்ற நோய் உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருப்பது போல் உள்ளது.

பன்றித் தொழிலில் ஈடுபடும் நேரடி மற்றும் மறைமுகத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் இழப்பு போன்ற பிரச்சனைகளை அலட்சியப்படுத்த முடியாது. ஆனால், நாட்டில் நோய் பரவுவதையும் பூஜ்ஜிய ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சலையும் தடுப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பன்றிக் காய்ச்சலை எதிர்கொள்ள அனைத்தும் தயார் நிலையில் இருக்கும் என்றும், தேவையான நேரத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நம்புகிறோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டைதீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது.

ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும்.

கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது.

அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குப்பை நகரம்

ஹட்டன் நகரின் ஆங்காங்கே குப்பைகள் குவிந்து கிடப்பதால், அப்பகுதி மக்களின் சுகாதாரத்திற்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் சுகாதார சீர்கேடான நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது ஹட்டன் நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வில்பிரட் புர, காமினி புர, பண்டாரநாயக்க புர, உள்ளிட்ட இடங்களில் குப்பைகள் உரிய முறையில் அகற்ற படாமையால் இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் அப்பிரதேசங்களைச் சேர்ந்த பலர், நுளம்புகள் பெருகும் அபாயம் அதிகரித்துள்ளதோடு, சுகாதார சீர்கேடான நிலை தோன்றியுள்ளது . குறித்த பிரதேசங்களில் குவிந்து கிடக்கும் குப்பைகளால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமைகள் குறித்து ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் செயலாளர் பண்டாரவிடம் வினவியபோது, "இது தொடர்பில் ஆராய்ந்து உரிய அதிகாரிகளுக்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்க நடவடிக்கை எடுப்படும்" என்றார்

செ.தி.பெருமாள்



## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 24

# அபிவிருத்தி வழி சமாதானம் -2



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

> கூடுதல் மோதல் ஒழுங்கு முறைவழி முறைகள் (எடுத்துக்காட்டாக குழு உரிமைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள்) சர்வதேசஅளவில் எளிதாக்கப்பட்ட உயரடுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் முன்னிலைக்கு வந்தன

2002இல் போர் நிறுத்த உடன்படிக்கையோடு இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேசநாடுகள் நேரடியாகப் பங்குபற்றின. இலங்கையில் சமாதானத்தின் இந்த சர்வதேச மயமாக்கல், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் அபிவிருத்தி, சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றியமாறிவரும் புவிசார் அரசியல் உரையாடல்களை பிரதிபலிக்கிறது.

கெடுபிடிப்போரின் போது,சர்வதேச உதவியானது உலகளாவிய லட்சியங்களைக் கொண்ட இரண்டுகருத்தியல் குழுக்களின் புவிசார் அரசியல் நலன்களின் கீழ் பெருமளவிற்கு உட்படுத்தப்பட்டது: அமெரிக்க மேலாதிக்க முதலாளித்துவம் ஒருபுறமும்; சோவியத் தலைமையிலான சோசலிசம் மறுபுறமுமகாக அபிவிருத்தியில் ஆளுகையின் பங்குபற்றியகவலைகள் நிச்சயமாக இருந்தபோதிலும், இவை புவிசார் அரசியல் அதிகார அரசியலால் அதிகமாக இருந்தன. இதன் விளைவாக இரு தரப்பு மற்றும் பலதரப்பு உதவிகள் சர்வாதிகார ஆட்சிகளுக்கு உதவியது.

ஏனெனில் இது நன்கொடையாளர்களின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு சேவை செய்தது. எவ்வாறாயினும், 1980 களின் பிற்பகுதியில் இருந்து,சோவியத் ஒன்றியத்தின் சரிவு மற்றும் மேற்கத்திய தாராளவாதத்தின் வெற்றி ஆகியவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் செயல்திறன்,வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் பற்றிய தாராளவாத கவலைகளுக்கு ஒரு இடத்தை வழங்கியது.

இச்சூழலில்,பொருளாதார தாராளமயமாக்கல் அல்லது 'கட்டமைப்புச் சீராக்கம்' மீதான அதன் ஒற்றைக் கவனத்துடன் முதல் தலைமுறை உதவி நிபந்தனைகள், நல்லாட்சிக்கான நிபந்தனைகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டது. மனிதஉரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைமேம்படுத்துதல்; திறமையான மற்றும் வெளிப்படையான பொதுநிர்வாகம்; ஜனநாயக பொறுப்புக்கூறல் மற்றும் பன்மைத்துவம்; சிவில் சமூகம் மற்றும் நவதாராளவாத பொருளாதார சீர்திருத்தங்களில் மக்கள் பங்கேற்பு ஆகியவை முக்கியமானவையாக முன்தள்ளப்பட்டன.

அரசுகளுக்கு இடையே மோதல்கள் உள்ளநாடுகளில், நல்லாட்சிக்கான இந்த மாற்றமானது, வளர்ச்சிக்கும் அமைதிக்கும் இடையிலான தொடர்புகளுக்கு புதிய கவனத்தை கொண்டுவந்தது.

கெடுபிடிப்போருக்குப் பிந்தைய ஆரம்பமானது, தாராளமய ஜனநாயகம் மற்றும் பொருளாதார தாராளமயம் ஆகியவற்றின் உலகளாவிய பரவல் மூலம் அமைதிக்கான வெற்றிகரமான நம்பிக்கையால் குறிக்கப்பட்டது, ஆனால் இந்த அமைதியான உலகத்திற்கான கனவு என்பது உண்மையில் அதன் மேலாதிக்கத்தை விரிவுபடுத்துகிறது மற்றும் அரசியலில் தாராளவாத ஜனநாயகம் நிலவுகிறது.

உண்மையில்,கெடுபிடிப்போருக்குப் பிந்தையகாலம், ஏற்கனவே இருந்த மோதல்களின் தொடர்ச்சி மற்றும் 'புதியபோர்கள்' வெடித்ததன் மூலம் குறிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய போர்கள் பொதுவாக கெடுபிடிப்போரின் போதுசித்தாந்த-பிராந்தியப் போட்டியில் பொறிக்கப்பட்ட அரசுகளுக்கு இடையேயான மோதல்களைக் காட்டிலும் நாட்டுக்குள்ளேயான அடையாள மோதல்களாகும்.

இத்தகைய அடையாள அரசியல் சில சமயங்களில் பாரம்பரிய உடைமைகள் மற்றும் குரோதங்களின் மீள் எழுச்சியாக சித்தரிக்கப்படுகிறது. சோசலிசத்தை மதிப்பிழக்கச் செய்தல் அல்லது கொலனித்துவத்திற்குப் பிந்தைய தலைவர்களின் முதல் தலைமுறையின் தேசத்தைக் கட்டியெழுப்பும் சொல்லாட்சிகள், அரசியல் சட்டபூர்வத்தன்மையின் தோல்வி ஆகியவற்றின் பின்னணியில் அவை மீண்டும் உருவாகின.

1990களில், இத்தகைய அரசுகளுக்கு இடையேயானஅடையாள மோதல்கள் வெற்றிகரமான வளர்ச்சிக்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் தாராளவாத அமைதியை உருவாக்குவதற்கான ஒரு கருவியாக அபிவிருத்தி இருக்கக்கூடும் என்று அங்கீகரிக்கப்பட்டது.

தாராளவாத அமைதியைக் கட்டியெழுப்பும் இந்த புதிய கதையாடல் ஐக்கிய நாடுகள் சபையின் 'அமைதிக்கானநிகழ்ச்சிநிரல்' (Agenda for Peace)மூலம் சர்வதேசஅங்கீகாரத்தைப் பெற்றது.இதுயுத்தம் மீண்டும் நிகழாமல் தடுப்பதைநோக்கமாகக் கொண்டபோருக்குப் பிந்தைய அபிவிருத்தியாக சமாதானத்தைக் கட்டியெழுப்பியது.

இந்த ஆரம்ப நிகழ்ச்சிநிரல் பின்னர் 'ஜனநாயகமயமாக்கலுக்கான நிகழ்ச்சிநிரல்' (Agenda for Democratization) )மற்றும் 'சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்புக்கான கட்டமைப்பு' (Framework for Cooperation in Peacebuilding) ஆகியவற்றில் தாராளவாத ஜனநாயகமயமாக்கலை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டது.

இது ஆயுத மோதலுக்கு முன்னும் பின்னும் அபிவிருத்தி தலையீடுகளை உள்ளடக்கிய மோதலுக்குப் பிந்தைய மறுசீரமைப்பிலிருந்து விரிவுபடுத்தப்பட்டது. இதன் பொருள், 1990களின் முற்பகுதியில்,சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பது ஆயுதமோதல்கள் மீண்டும் நிகழாமல் அல்லது தொடர்வதைத் தடுப்பதற்கான ஒரு கருவியாக அபிவிருத்தியைப் பயன்படுத்தி மோதலை நிலைமாற்றுதலைக் குறிக்கிறது.

மோதல்களை மாற்றுவதற்கும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும் இந்தமுக்கியத்துவம் உலகவங்கிக்குள் செல்வாக்கைப் பெற்றுள்ளது. இது பாரம்பரியமாக பொருளாதார வளர்ச்சியில் குறுகிய கவனம் செலுத்துகிறது. 2003 இல் வெளியிடப்பட்ட உலக வங்கியின் ஒரு சிறப்பு ஆய்வு, அமைதிக்கும் வளர்ச்சிக்கும் இடையே உள்ள நெருங்கிய மற்றும் பரஸ்பர தொடர்புகளை வலியுறுத்தியது.

இந்த மாறுபட்ட மாற்றங்களைத் தொடர்ந்து, அபிவிருத்தி உதவி அமைப்புகள் அரசுகளுக்கு இடையேயான மோதல்களின் பரவலுக்கு அதிகளவில் பதிலளித்து, அமைதிக்கும் வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்புகளை நிவர்த்தி செய்யமுயன்றன. மோதல்களை மாற்றுவதற்கும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும் ஒரு கருவியாக அபிவிருத்தி உதவியைப் பயன்படுத்தியது.

பலதரப்பு உதவி நிறுவனங்கள் மற்றும் நன்கொடை நாடுகள் அமைதி-அபிவிருத்தி இணைப்புகளில் அக்கறைகொண்டுள்ளதால், போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முன்னேற்றம், அரசுகளுக்கு இடையேயான மோதல்கள் உள்ளநாடுகளுக்கு அபிவிருத்தி உதவிக்கான நிபந்தனையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

வளர்ச்சிப் பேச்சு மற்றும் நடைமுறையில் ஏற்பட்டுள்ள இந்தமாற்றங்கள், அரசுகள், சர்வதேச நிதிநிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் ராணுவப் படைகள் உள்ளிட்ட பல அரங்காடிகளுக்கு, உதவி சார்ந்த நாடுகளில் அமைதிச் செயல்முறைகளில் செயலில் பங்குதாரர்களாக மாறுவதற்கான இடத்தைத் திறந்துவிட்டன.

வளர்ச்சிக்கும் அமைதிக்கும் இடையே உள்ள தொடர்புகளின் மீதான இந்த கவனத்தின் மத்தியில்,அமைதி என்ற கருத்தாக்கம் குறிப்பிடத்தக்கவகையில் மிகக் குறைவான கவனமே பெற்றது. சமாதானத்தின் அர்த்தத்தின் மீதான இந்த ஒப்பீட்டு மௌனம் ஒரு குறிப்பிட்ட கருத்தாக்கத்தின் மேலாதிக்க நிலைப்பாட்டிற்கு சாட்சியமளிக்கிறது, அதாவது தாராளவாத அமைதி. உலகளாவிய தெற்கில் உள்ள நாடுகளுக்கு இடையேயான மோதல் தீர்வு பற்றிய சமகால உரையாடலில் இது தாராளவாத ஜனநாயகம் மற்றும் தாராளவாத சந்தைப் பொருளாதாரங்களின் சகவாழ்வைக் குறிக்கிறது.

தாராளவாத ஜனநாயக அரசாங்கங்கள் உள் மற்றும் சர்வதேச விவகாரங்களில் ஜனநாயகமற்ற அரசுகளை விட அமைதியானவை என்ற ஜனநாயக அமைதி ஆய்வறிக்கையின் அடிப்படையில், ஜனநாயகத்தின் மூன்றாவது அலை எனப்படும் ஜனநாயக மாற்றங்களின் அனுபவங்கள்,தாராளவாத ஜனநாயக அமைப்புகளை வடிவமைப்பதில் கவனம் செலுத்தின.

கூடுதல் மோதல் ஒழுங்கு முறைவழி முறைகள் (எடுத்துக்காட்டாக குழு உரிமைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள்) சர்வதேசஅளவில் எளிதாக்கப்பட்ட உயரடுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் முன்னிலைக்கு வந்தன.

மேலும் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் இடையே உள்ள தொடர்புகள் குறித்த மேற்கூறிய சொற்பொழிவின் அடிப்படையில், அசல் தாராளவாத அமைதி ஆய்வறிக்கையில் புதிய தாராளமய வளர்ச்சிக்கு வலுவானமுக்கியத்துவம் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, அபிவிருத்தியின்மை மற்றும் ஆயுதமோதலின் தீய சுழற்சிகளை நவதாராளவாத வளர்ச்சி, தாராளமய ஜனநாயகம் மற்றும் தாராளவாத அமைதி ஆகிய நல்லொழுக்க சுழற்சிகளுடன் மாற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இலங்கையில் சர்வதேச சமாதானம் இரு தரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்பின் மூலம் வெளிப்பட்டது. ஐந்தாவது சமாதான செயல் முறையானது' அபிவிருத்தியின் மூலம் சமாதானத்தை'பின்பற்றியது. எவ்வாறாயினும், இலங்கையின் சமாதானம் பற்றிய கேள்வியானது, அரச, பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பின் புவிசார் அரசியலிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மோதல் தீர்வுக்கான புவிசார் அரசியலின் இந்த மையமானது சமாதான முன்னெடுப்புகள் ஸ்தம்பிதமடைந்து, கதாநாயகர்கள் ஆயுதமேந்திய பகைமைக்குத் திரும்பியபோது மிகவும் புலப்பட்டது. இந்தச் சூழ்நிலையில்,சமாதானப் பேச்சுவார்த்தைகளின் சிறப்பம்சமாக இருந்த அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அந்தஸ்து சமச்சீரற்ற தன்மையால் மாற்றப்பட்டது. சர்வதேச அரங்காடிகள் கதாநாயகர்களை அரச மற்றும் அரசசார்பற்ற அரங்காடிகளாகக் கையாளும் விதத்தில் இது புலப்பட்டது.

## நியு அந்தனீஸ் குரூப் தீனி வியாபாரத்துக்கு

# ISO 22000:2018 சான்றிதழ்




நியு அந்தனீஸ் குரூப் அண்மையில் தனது தீனி வியாபாரத்துக்கு ISO 22000:2018 சான்றிதழ் கிடைத்துள்ளதாக அறிவித்துள்ளது. உயர் தரம் வாய்ந்த, பாதுகாப்பான மற்றும் நிலைபேறான தீனி தீர்வுகளை இலங்கையின் கோழி இறைச்சி உற்பத்தி துறைக்கு பெற்றுக் கொடுப்பதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த சான்றிதழ் அமைந்துள்ளது.

நியு அந்தனீஸ் ஃபீட்ஸ் நிறுவனத்துக்கு இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளதுடன், உயர் தரம் வாய்ந்த சர்வதேச நியமங்களை பின்பற்றி, தனது தீனி தயாரிப்புகள் கோழிகளின் தரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவது மாத்திரமன்றி, நிலைபேறான மற்றும் சூழலுக்கு நட்பான பண்ணை செயன்முறைகளுக்கு பங்களிப்பு வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.

2022 ஆம் ஆண்டில் நாட்டின் நீண்ட காலமாக இயங்கிய புகழ்பெற்ற உயர் தரம் வாய்ந்த தீனி உற்பத்தியாளரான கோல்ட் கொய்ன் ஃபீட்ஸ் மில்ஸ் (லங்கா) லிமிடெட்டை மூலோபாய ரீதியில் கையகப்படுத்தியிருந்ததைத் தொடர்ந்து, நிறுவனத்தின் ஒன்றிணைந்த கோழி இறைச்சி வியாபாரத்தின் உள்ளக அங்கமாக நியு அந்தனீஸ் ஃபீட்ஸ் அமைந்துள்ளது. இந்த ஒன்றிணைப்பினூடாக, கோழி இறைச்சி பெறுமதி சங்கிலியில் பரந்தளவு, பரிபூரண தயாரிப்பு மற்றும் தீர்வு தெரிவுகளை பெற்றுக் கொடுக்கும் குழுமத்தின் ஆற்றல் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், பண்ணையிலிருந்து முள்ளுக்கரண்டி வரை அவர்களின் விநியோக சங்கிலியில் கடுமையான பாதுகாப்பு விதிமுறைகளும் உறுதி செய்யப்படுகின்றது.

நியு அந்தனீஸ் குரூப் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர இந்த சாதனை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், “ISO 22000:2018 சான்றிதழை பெற்றுக் கொள்வது என்பது தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் உயர் நியமங்களை பேணுவதில் எமது அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. எமது கோழி இறைச்சி தயாரிப்புகளில் மாத்திரமன்றி, தொழிற்துறைக்கு நாம் வழங்கும் அத்தியாவசிய தீனிகளிலும் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. சந்தைக்கு முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட, சூழலுக்கு நட்பான கோழி இறைச்சி தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் சிறந்த நிலையில் திகழ்கின்றோம்.” என்றார்.

நியு அந்தனீஸ் ஃபீட் வியாபாரம் என்பது அண்மைய மாதங்களில் பெருமளவு வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. புத்தாக்கம் மற்றும் நிலைபேறாண்மை போன்றன தொடர்பில் கவனம் செலுத்தி, சூழலுக்கு நட்பான மற்றும் அன்ரிபயோட்டிக் இல்லாத கோழி இறைச்சி உற்பத்திக்கு, தனது பசுமையான பெறுமதிகளை பின்பற்றும் தீனிகளை வழங்குகின்றது. ISO 22000:2018 ஊடாக, இந்த வாக்குறுதி மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் FSSC 22000 சான்றிதழைப் பெற்ற முதலாவது கோழி இறைச்சி உற்பத்தியாளர் எனும் வகையில், நியு அந்தனீஸ் குரூப், தொடர்ந்தும் தொழில்துறையில் முன்னோடியாக திகழ்ந்து, தீனி மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியில் பிராந்தியத்தில் நியமங்களை பதிவு செய்த வண்ணமுள்ளது.

## SLT–MOBITEL Nebula Institute of Technology க்கு Campus Chapter இன்

# 10 ஆவது IET எனும் கௌரவம்

SLT-MOBITEL இன் கல்விப் பிரிவான SLT-MOBITEL Nebula Institute of Technology க்கு, Campus Chapter இன் 10ஆவது IET எனும் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது. Institute of Engineering Technology (IET) உடனான பங்காண்மையினூடாக, Nebula Institute ஆனது, அதன் சகல நிலைகளையும் சேர்ந்த பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பட்டம் பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச மட்டத்தில் தமது கல்வியை தொடரவும், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆதரவளிக்கும் திறனைக் கொண்டுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மாணவர்கள் அல்லது ஊழியர்களுக்கு IET இன் சமூகத்தில் அங்கம் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குவதாக அமைந்துள்ளது.




இந்த கௌரவிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றதுடன், அதில் பிரதம அதிதியாக IET இலங்கை வலையமைப்பின் (SLN) செயலாளர் பேராசிரியர். அனுருத்த ஜயகொடி கலந்து கொண்டார். அத்துடன், IET இலங்கை வலையமைப்பின் (SLN) உப தலைவர் நளீன் ஜயசூரிய, SLT-MOBITEL Nebula Institute of Technology இன் பிரதி பொது முகாமையாளர் கலாநிதி. ஆசிரி இந்திக, IET இலங்கை வலையமைப்பின் (SLN) இளம் நிபுணர்கள் வலையமைப்பின் தவிசாளர் நிமந்த மதுஷான், 2021 ஆம் ஆண்டுக்கான இளம் பெண் பொறியியலாளர் வெற்றியாளரான பமோத்யா சேனநாயக்க ஆகியோரும், Nebula மற்றும் IET இன் இதர சில உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். IET சமூகத்தின் அங்கமாக, Nebula Institute இன் மாணவர்களுக்கு தமது தொழில் நிலையை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் பெருமளவு வளங்கள் மற்றும் ஆதரவை பெற்றுக் கொள்ள முடியும். இதில், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபுணத்துவ பதிவு மற்றும் விருத்தி, சர்வதேச பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்தும் வாய்ப்புகள், நவீன ஆய்வு மற்றும் உள்ளார்ந்த அம்சங்களை அணுகல் மற்றும் நிகழ்வுகள், கற்கைகள் மற்றும் பிரசுரங்களை அணுகும் வாய்ப்பு போன்றன வழங்கப்படும்.

இந்த கௌரவிப்பினூடாக, Nebula மாணவர்களுக்கு பரந்தளவு நிபுணர்களைக் கொண்ட பீடத்தை அணுகல், பெறுமதி வாய்ந்த வளங்கள் மற்றும் நிபுணத்துவ விருத்திக்கான வாய்ப்புகள், அறிவு பகிர்வு மற்றும் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப களத்தில் கைகோர்ப்பு போன்றவற்றுக்கான வாய்ப்புகள் வழங்கப்படும். கம்பஸ் வளாகத்தினுள் IET பிரிவை நிறுவியுள்ளதனூடாக, Nebula Institute இனால் மாணவர்களுக்கு தமது களங்களில் வெற்றிகரமாக செயலாற்றுவதறகு உயர் கல்விசார் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பு மேலும் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது.

Institution of Electrical Engineers (IEE) மற்றும் Institution of Incorporated Engineers (IIE) ஆகியன இணைக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட IET, பொறியியல் அறிவை பகிர்ந்தளிப்பதில் முக்கிய பங்காற்றுவதுடன், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் நியமங்களை பேணுவதில் பங்களிப்பு செலுத்துகின்றது. மேலும், கல்விசார் கற்கைகளுக்கு தகைமைகளை வழங்கல் மற்றும் நிபுணத்துவ தகைமைகளை வழங்கல் போன்றவற்றுக் மேலதிகமாக இந்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

அறிவு பகிர்வுக்கு அவசியமான கட்டமைப்புகளை பெற்றுக் கொடுப்பதுடன், ஆய்வுகள் மற்றும் விருத்தியில் IET முக்கிய பங்காற்றுகின்றது. நிபுணத்துவ அபிவிருத்தி வாய்ப்புகளுக்கு ஆதரவளித்து ஊக்குவிப்பதுடன், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொடர்பில் பிந்திய தகவல்களை அறிந்திருப்பதற்கு அங்கத்தவர்களுக்கு உதவுகின்றது. உலகளாவிய பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களை இணைப்பதுடன், பொறியியல் சவால்கள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் செயலாற்றக்கூடிய பொறியியல் சமூகத்தை ஊக்குவிப்பதிலும் IET பங்களிப்பு வழங்குகின்றது. மேலும், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) கல்வியை ஊக்குவித்து, இளம் வயதிலிருந்தே பொறியியல் துறையில் நாட்டத்தை ஊக்குவிக்கின்றது.



## முதிர் கன்னிகளாய் ஆக்கப்பட்டவர்கள்



பருவமும் இயற்கையும்
அழைக்காதுவருகிறது
கன்னிகள்
திருமணத்துக்காகக்
காத்திருந்தனர்.
சிலதிருமணங்களோ
பேசியும்
முற்றுபெறுவதில்லை
காதலித்தும்
கைகூடுவதில்லை

கனவாகிப்போன இல்லறவாழ்வுக்கு
காரணங்கள் பலஉருவாக்கப்பட்டன

அவர்களில் பலர் சீதனம் எனும்
சீர்களற்றபெண்களாய் இருந்தனர்

அழகென்றுகற்பிதம் செய்யப்பட்ட
உடல் வாகுஅற்றவராகவும்
சிலர் நோயாளிகளாகவும்
வாழ்ந்தனர்



படித்தவள் தனக்கேற்றவனுக்காக
தன் இளமையைவிரயமாக்கிக்
கொண்டிருந்தாள்.

வரிசையாகப் பலபெண்பிள்ளைகள்
இருந்தவீட்டில்
மூத்தவர்களின் இல்லறவாழ்வில்
ஓயாதபுயலடித்துக் கொண்டிருந்தது
அடுத்தடுத்தவர்கள்
அனாதைகளாயினர்

பெண்தலைமைக் குடும்ப
வறுமையில்
கண்டுகொள்ளாமல் ஆக்கப்பட்டனர்
கன்னிகள்

படித்தபடிக்காத
அழகானஅழகற்ற
குடும்பப் பின்னணிஅற்ற
பின்னணிஉள்ள
உத்தியோகமுள்ளஅற்ற
இன்னும்
விவாகரத்துப் பெற்றஆண்களுக்கு
தகுதியானபெண்கள்
தேடப்பட்டனர்

முதிர்கன்னிகள் தவிர்க்கப்பட்டு

இல்லறத்தையும்
வாரிசுகளையும் பற்றிய
ஏராளம் கனவுகள் பிறந்து
பின் இறந்துபோயின
வயதைத் தொலைத்த
பெண்களுக்கு

ஏக்கங்கள் தொடரவயதுகள் உதிர
சுற்றியுள்ளவர்களால்
அனுதாபத்துடன் பார்க்கப்பட்டனர்
பின்னர் கைவிடப்பட்டசமூகத்தினரால்
முதிர்கன்னிகளென
முத்திரைகுத்தப்பட்டனர்.

பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

## பாய்ந்தோடிவரும் பாசங்கள்...!

இதுவரைநான் பலரைகண்டதில்லை.
அதேவேளைசிலர் எனக்கு
நண்பர்களாகவும் இருந்தனர்.
இன்னும் சிலரோ
தெரிந்தவர்கள்தான்.

வசதியானவாழ்க்கை
காசுபணம் சொகுசானகார்கள்
மாடிவீடுகள் எனவாழ்ந்தாலும்
இந்த இவர்களெல்லாம்
என்னைதெருதின்னைகளில்
கண்டபோதெல்லாம் ஒருசிரிப்புத்தன்னும்
பார்த்துஉதிர்க்காது
முகந்திருப்பிப் போனவர்கள்தான்.



இப்போதுதிடீரெனஎன்னைத்
தெரிகிறதுமட்டுமல்லஎனது
குடும்பத்தவரையும்
தெரிகிறது.
அக்கரையுடன்
அருகேஓடோடிவந்து
விசாரிப்பதில்
எவ்வளவுஆவலாக.
என்ன ஓர் ஆச்சரியம். எப்படி
வந்தது இவர்களுக்கு
இந்தஞானம்...?
உண்மைபுரிந்து.

இவர்களுக்கெல்லாம் எம்மைப்
போன்றவர்களைதெரிந்துகொள்ள
தேர்தலேநீ
அடிக்கடிவரவேண்டும்
இவர்கள் எம்மைஅக்கரையுடன்
அனுகிவிசாரித்துச் செல்வதற்காகமட்டுமே...
அதைவிடவேறொன்றும்
இவர்களால் எமக்குஆகாது
என்பதுஎமக்கெல்லாம்
நன்றாகவேதெரியும்

ஏனெனில்...
எத்தனைதேர்தல்கள் வந்தன
இவர்களைப்போல
எத்தனைபேர்களைநாம்
கண்டவர்கள்...மட்டுமல்ல
காணாமலும்போய்
மீண்டும் வந்துமுகங்காட்டிசிரிக்க.
இவர்களின் திடீர்பாசங்கள்
எப்படியெனதெரியாதவர்களா
நாம்...?

ஷெல்லிதாசன்





## வழக்கு



இந்த
காற்றுக்கும்
எனக்கும்
எல்லைச் சண்டை

எப்போது
பார்த்தாலும்
தீண்டல்
விலகல்
வாசம்
சுவாசம் - என
எல்லைமீறி

அந்த
சுருண்ட
முடிக்காரியை
நினைவூட்டிச்
செல்வதால்...

இனி
வழக்குத்
தொடர்வதை
தவிர
எனக்கு
வேறு
வழியில்லை

திருமலைச்சிட்டு

# சிறுகக் கட்டிப் பெருக வாழ்





பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

நாம் கடைத்தெருவிற்கு செல்கின்ற பொழுது எம்மால் பல்வேறு விதமான உணவு பட்சணங்களையும், நவீனமயமான மின்சார உபகரணங்களையும், வீட்டுத் தளபாடங்களையும் வியாபார நிறுவனங்களில் காணக் கூடியதாகவுள்ளது.

இந்த நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைக் கவரக்கூடிய விதத்தில் மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் இவைகளை விற்பனைக்காக அடுக்கி வைக்கின்றன

இதனால் ஈர்க்கப்பட்ட மக்கள், இப் பொருட்களை வாங்கும் முன் ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

இவைகள் எல்லாம் இல்லாமல் எம்மால் வாழ முடியுமா , இவைகள் எமக்கு அத்தியாவசியமானவையா என்று சிந்திப்பது அவசியம்.

எம்மில் பெரும்பாலானவர்கள் தமது வீட்டிற்கு வரும் விருந்தினர்களைக் கவர்வதற்காகவும், மற்றவர்கள் முன்னிலையில் தாம் ஆடம்பரமாக வாழ்வதாக காட்டிக் கொள்வதற்காகவும், இவ்வாறானப் பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடும்.

பிறரின் முன் அந்தஸ்து ரீதியாக உயர்ந்த இடத்தில் இருப்பதாக காட்டிக் கொள்வதற்காகவும் ஆடம்பரப் பொருட்களை நுகர்ச்சி செய்கின்றார்கள்.

இதனால் வருமானத்தை விட மேலதிகமான செலவினை செய்து, தொடர்ச்சியாக தனது காலத்தைக் கடனிலும், வட்டியிலும் கழிக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகின்றனர்.

கொரோனா தொற்று நோயைத் தொடர்ந்து வந்த காலகட்டத்திலிருந்து பொருட்களின் விலைகள் ஒவ்வொரு நாளும் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றன.

இந்நிலைமைகளில் எமக்கு மிகவும் அத்தியாவசியமான பொருட்களை மாத்திரம் வாங்குவது புத்திசாலித்தனம் ஆகும்.

அத்தியாவசியமற்றப் பொருட்களை நுகர்வதில் இருந்து, முடிந்தளவு விலகி இருப்பது நல்லது.

இன்றைய கால கட்டத்தில் சேமிப்பு மிகவும் அவசியமானதாகும்.

நாம் சிறுவர்களாக இருந்த காலகட்டங்களில் எமது பெற்றோர்கள் எங்களுக்கு உண்டியலை வாங்கிக் கொடுத்தார்கள்.

வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் கொடுக்கின்ற காசு அல்லது வேறு விதமாக வருகின்ற காசையும் நாங்கள் அந்த உண்டியலில் சேமிப்பது வழக்கமாக இருந்தது.

இவ்வாறு சிறுவர்களாக இருந்த காலகட்டத்திலேயே சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவித்தவர்கள் எமது பெற்றோர்கள்.

இதைப் போல இன்று வங்கிகள், தனியார் நிறுவனங்கள், தபாற்கந்தோர் , காப்புறுதி நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிதி நிறுவனங்கள் சேமிப்புப் பழக்கத்தினை மக்கள் மத்தியில் ஊக்குவிப்பதனை நாம் அவதானிக்கலாம்.

எமது நாட்டில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்பதற்காக, வங்கிகள் சேமிப்பு புத்தகங்களை வழங்கி, ஊக்குவிப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது.

சிக்கனம் என்பதனை பண ரீதியாக மாத்திரமல்லாது எரிபொருள், மின்சாரம், தண்ணீர் , உணவு போன்றவைகளின் மூலமாகவும் மேற்கொள்ளலாம்.

எறும்புகள் தமக்குத் தேவையான உணவுகளை கோடைக்காலங்களில் சேமித்து வைத்து மாரிக் காலங்களில் அவற்றை பயன்படுத்துகின்றன.

இதே போல தேனீக்களும் சேமிப்பினை மேற்கொள்கின்றன.

பனி நிறைந்த இடங்களில் வசிக்கின்ற மிருகங்களும் தமது உணவினை எதிர்காலம் கருதி சேமித்து வைக்கின்றன.

இவைகள் எதிர்காலம் கருதி சேமிப்பினை மேற்கொள்கின்ற போது மனிதர்களாகிய நாமும் எதிர்காலத் தேவையைக் கருதி சேமிப்பினை மேற் கொள்வது அத்தியாவசியமாகிறது.

சேமிப்பின் அவசியத்தை உணர்ந்த எம் முன்னோர்கள் “சிறுகக் கட்டிப் பெருக வாழ்” என்று கூறி வந்துள்ளனர்.

ஆதிகால மனிதன் தான் வேட்டையாடிய மாமிசத்தை பதப்படுத்தியும், காயவைத்தும், தேனில் ஊறவைத்தும் சேமித்தான்.

அவ்வாறு சேமித்ததை தமக்கு தேவையான நேரத்தில் உண்டான்.

விவசாய முறை வளர்ச்சி அடைந்த காலகட்டத்தில் நெல்லை சேமிக்கும் முறையினை கண்டுபிடித்தான்.

நீர் பற்றாக்குறை ஏற்படும் என்பதனை உணர்ந்ததனால், நீரைச் சேமிக்கும் பழக்கத்தையும் காலகதியில் கற்றுக்கொண்டான்.

நம் முன்னோர்களது வாழ்க்கை முறை கூட சேமிப்பு சம்பந்தமான ஒரு அறிவினை எமக்கு வழங்குகின்றன.

எமது வருமானத்தில் தேவையான செலவினங்கள் போக, மிகுதியை சேமிப்பது அவசியம் ஆகும்.

மனித வாழ்க்கையில் எதுவும் நிச்சயமற்றது.

எந்நேரத்திலும் எதுவும் நடக்கலாம்.

பொருளாதார ரீதியிலான நெருக்கடிகள் ஏற்படுகின்ற பொழுது அதிலிருந்து மீள்வதற்கு சேமிப்பு இன்றியமையாததாக உள்ளது.

இற்றைக்கு 90 வருடங்களுக்கு முன்பதாக, முதலாவது சர்வதேச சேமிப்பு வங்கியின் மகாநாடு, இத்தாலியிலுள்ள மிலான் நகரில் 1924 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இந்த மகாநாட்டில் கிட்டத்தட்ட 80 நாடுகளைச் சேர்ந்த சேமிப்பு வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இத்தாலியப் பேராசிரியரான பிலிப்போ ரவிசா அக்டோபர் 31 ம் திகதியை “சர்வதேச சிக்கன தினம் “ என அறிவித்தார்.

முதலாம் உலகப் போருக்குப் பிறகு பொதுமக்கள் வங்கிகளின் மீதான நம்பிக்கையை இழந்திருந்தனர்.

இவ்வாறு இழந்திருந்த நம்பிக்கையினை மீட்டெடுப்பதுடன், மக்களின் சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவிப்பதாக இந்த நாள் அமைகின்றது.

இந்த மாநாட்டுக்குப் பிறகு மக்கள் சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர்.

இன்று வங்கிகள் சேமிக்கும் பணத்திற்கு வட்டி வழங்குகின்றன.

இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு.

சேமிப்பதன் மூலம் எமது வீட்டில் முன்னேற்றம் ஏற்படுவதுடன், அது நாட்டையும் வளப்படுத்துவதாக அமைகின்றது.

பொருளின் அளவறிந்து செலவு செய்யாதவன் வாழ்க்கை நன்றாக இருப்பது போல தோன்றினாலும் , பின்னர் அது வந்த இடம் தெரியாது அழிந்துபோகும்.

சிக்கனமாக வாழும் வழிகளை கண்டுபிடித்து, அதற்கேற்ப வாழும் பொழுது அவனால் சந்தோசமாக வாழ முடியும்.

சிக்கனமாக வாழ்வது என்பது கஞ்சத்தனத்திலிருந்து வேறுபட்டது.

“ஆகாது அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை” , என்பது திருக்குறள்.

அதாவது பணம் செல்கின்ற வழியானது வருவாய் வருகின்ற வழியை விட பெரியதாய் ஆகிவிடாத பட்சத்தில் வரவு எவ்வளவு சிறியதாக இருந்தாலும்,செலவு அதனை மிஞ்சி விடாமல் கட்டுக்குள் இருந்தால், என்றும் நமது வாழ்வில் கேடு வராதென எடுத்தியம்புகின்றார் திருவள்ளுவர்.

சிக்கனம் என்பது தேவையானவற்றுக்கு மாத்திரம் செலவழிப்பது.

சிக்கனமாக வாழ்வோம்.

சேமிப்பை மேம்படுத்துவோம்.

வாழ்க்கையை, நாட்டை வளப்படுத்துவோம்.



# அரக்கு கைத்தொழில்



உதயகுமார் ரதிகலா,
ஊடக கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைகழகம்.

இலங்கை ஒரு பல் கலாச்சார கட்டமைப்பை கொண்ட நாடாகும் .இங்கு பலவிதமான பண்பாட்டு கலாச்சாரங்கள் உணவு கலாச்சாரங்கள் என்பன காணப்படுகின்றன இலங்கையின் பாரம்பரியங்களில் ஒன்றுதான் எமது கைத்தொழில். காலம் காலமாகவே இலங்கை மக்களின் பொருளாதார வளர்ச்சியில் கைத்தொழில்கள் மிக முக்கிய இடத்தை பெறுகின்றன இவை எமது மரபார்ந்த அறிவை வெளிக்கொண்டுவரும் கலையாகவும் பார்க்கப்படுகின்றது இலங்கையின் பாரம்பரியமான கைத்தொழில்களாக மட்பாண்ட கைத்தொழில் நெசவு கைத்தொழில் முகமூடி கைத்தொழில் பனைசார் கைத்தொழில்கள் பித்தளை கைத்தொழில் சிரட்டை கைத்தொழில் என்பன காணப்படுகின்றன. வளங்களை பயன்படுத்தி மனிதருடைய தேவையை நிறைவு செய்வதற்கு மனித தலையீட்டால் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சியாக கைத்தொழில்களில் நோக்கப்படுகின்றன.

அந்த ரீதியில் இலங்கையில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தொழில்களில் அரக்கு கைத்தொழிலும் ஒன்றாகும். இதனை சிங்களத்தில் லாக்சா வெட எனக் கூறுகின்றனர் அரக்கு கைத்தொழில் என்பது மரத்தால் செய்யப்படும் பொருட்களுக்கு அலங்கார வேலைபாடுகளை செய்வதாகும். இந்த கைத்தொழில் கண்டிய மன்னர் காலத்தில் இருந்து இற்றை வரை தொடர்ந்து வரும் பாரம்பரியமான இலங்கைக்கு உரித்தான சுதேசிய கைத்தொழிலாக பார்க்கப்படுகின்றது. சங்கமித்தை பிக்குனி இலங்கைக்கு வரும்போது அவர்களோடு 18 அரக்கு கைவினை கலைஞர்களையும் அழைத்து வந்ததாக சொல்லப்படுகின்றது. இவர்கள் மன்னர் காலத்தில் அரண்மனைக்கு தேவையான கொடிகளின் கம்பங்கள் அரண்மனை உள்ளக அலங்கார வேலைபாடுகள் மன்னனின் அரியாசனம் விசிறிகள் மேசைகள் கதிரைகள் போன்றவற்றிற்கு அக்காலத்தில் அலங்காரம் செய்ததாக கூறப்படுகின்றது. கண்டிய மன்னர் காலத்தில் கோட்டல் பத்த என்ற அரச தொழில்நுட்ப பிரிவாகவும் இது காணப்பட்டுள்ளது. இந்த கைத்தொழில் அப்போது ஹங்கிடிவசம் என அழைக்கப்பட்டுள்ளது இந்த கைத்தொழில் செய்யும் கைவினைஞர்களை ஹங்கிடியன் என அழைத்துள்ளனர் மன்னர் காலத்தில் உயரிய அந்தஸ்தை பெற்ற கைத்தொழிலாக இது பார்க்கப்பட்டுள்ளது. இலங்கையில் கைத்தொழிலுக்கு புகழ்பெற்ற பிரதேசங்களாக மாத்தளையில் ஹப்புவித கண்டியில் கூரிக்கட்டுவ தங்கலையில் அங்குலமடுவ பலாங்கொடையில் பல்லே கந்த ஆகிய இடங்களை குறிப்பிடலாம் இக் கைத்தொழில் பாரம்பரியமாக தந்தையிலிருந்து மகனுக்கு என தலைமுறை வழியாக கடத்தப்பட்டு வருகின்றது.



இந்த அரக்கு கைத்தொழிலில் அலங்காரம் செய்வதற்கான வர்ணங்கள் அரக்கு பூச்சிகளிருந்து பெறப்படுகின்றன. இந்த அரக்கப் பூச்சிகளை அதிகமாக இந்தியா பங்களாதேஷ் தாய்லாந்து ஆகிய நாடுகளில் காண முடியும். அரக்கு கைத்தொழிலின் முக்கிய பிறப்பிடமாக இருப்பது இந்தியாவாகும், லாக்சா எனப்படும் அரக்கு பூச்சியிலிருந்து வெளிவரும் பிசின் போன்ற திரவம் சேமிக்கப்பட்டு அவை வளியில் உலர்த்தப்பட்டு வண்ண சாயங்கள் சேர்க்கப்படுகின்றன இந்த லாக்சா எனப்படும் பூச்சி இனங்கள் எல்லா மரங்களிலும் வாழ்வதில்லை, பூவரசு இலந்தை கோப்பி போன்ற குறிப்பிட்ட சில மரங்களில் மட்டுமே வாழ்கின்றன. பெண் பூச்சிகளின் உடல்களில் இருந்தே இவ்வகையான பிசின் போன்ற திரவம் சுரக்கப்படுகின்றது அவை சேமிக்கப்பட்டு வர்ணங்கள் பூசுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

இந்த வர்ணங்கள் மூலமாக குடைப்பிடி ஈட்டி பிடி புல்லாங்குழல் ஆபரண பெட்டிகள் நாதஸ்வரம் கட்டில் பூச்சாடிகள் வாசனை பொருட்களின் பெட்டிகள் என்பன அலங்காரம் செய்யப்படுகின்றன. அரக்கு கைத்தொழிலில் பிரபல்யம் அடைந்த இடமாக இருப்பது மாத்தளை மாவட்டமாகும் .மாத்தளை மாவட்டத்தில் ஹப்புவித பகுதியில் லேலியம்ப எனும் பிரதேசத்தில் இந்த கைவினைக் கலைஞர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் தலைமுறை தலைமுறையாக இந்த கைத்தொழிலை மேற்கொண்டு வருகின்றார்கள். பி எச் லலித் குமார பி எச் திலகரத்ண ஆகியோர் இக் கைடத்தொழிலை வழி வழியாக செய்து வருகின்றார்கள் .இவர்களிடம் எடுக்கப்பட்ட நேர்காணலின்படி இலங்கையில் தற்போது அரக்கு பூச்சிகள் வளர்க்கப்படுவதில்லை இதற்கான மூலப்பொருட்கள் இந்தியாவில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன. வர்ணம் தீட்டுவதற்கான நிற சாயம் ஒன்றின் விலை 6000 தொடக்கம் 8000 வரையிலும் செல்வதாக கூறப்படுகின்றது. இங்கு சிறிய சிறிய மரத்தாலான பொருட்களை அவர்களே உற்பத்தி செய்கின்றார்கள் இதற்காக பாரம்பரியமான கருவிகளையும் ஆயுதங்களையும் அவர்கள் வைத்துள்ளார்கள்.

இப்பிரதேசத்தில் இவர்கள் மட்டுமல்லாமல் இவர்களைப் போன்ற பல்வேறு அரக்கு கைவினைஞர்கள் காணப்படுகின்றார்கள். இக் கைத்தொழிலுக்கான செல்வாக்கு ஆரம்ப காலத்தில் இருந்ததைப் போன்று இப்போது இல்லை என கூறப்படுகின்றது. எமது சுதேசிய கைவினைப் பொருட்களின் மீது வெளிநாட்டவர்களுக்கு இருக்கும் ஈர்ப்பு எமது நாட்டவருக்கு இல்லை இவர்கள் செய்யும் அரக்கு உற்பத்தி பொருட்களை அதிகமாக சுற்றுலா வரும் இலங்கைக்கு சுற்றுலா வரும் வெளிநாட்டு பயணிகளை விரும்பி வாங்குகின்றனர் என அக் கைவினை கலைஞர்கள் கூறுகின்றனர். இதனால் தற்போதைய காலகட்டத்தில் இக் கைத்தொழிலானது பாரதூரமான வீழ்ச்சியை கண்டுள்ளது அத்தோடு இக் கைவினை கலைஞர்களும் பகுதி நேரமாகவே இக் கைத்தொழிலை செய்து வருகின்றார்கள் என நேர்காணலில் கூறப்பட்டது.

இங்கு பிரதானமாக இருவகையான பாணிகளில் இவை தயாரிக்கப்படுகின்றன. நியபொத்து வெட (நக வேலை) பட்டல் வெட ( பட்டரை வேலை) நியபொத்து வெட என்பது முற்று முழுதாக கையில் மாத்திரம் செய்யப்படும் வேலையாக காணப்படுகின்றது. பட்டல் வெட என்பது பட்டறையில் செய்யக்கூடிய வேலையாக காணப்படுகின்றது முக்கியமான நிறங்களாக சிவப்பு கருப்பு மஞ்சள் பச்சை ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வெல்பொத்த லணுதங்கய கல்பிந்து அரச இலை தாமரை இதழ்கள் தனியிலை ஈரிலைப் போன்ற அலங்கார வடிவங்கள் உபயோகிக்கப்பட்டு அலங்கார வடிவங்கள் செய்யப்படுகின்றன. வருடந்தோறும் கண்டி தலதா பெரஹெர ஊர்வலத்தின் போது கொண்டு செல்லப்படும் கொடிகளின் கைப்பிடிகள் ஆலவட்டும் விசிறிகள் போன்றவற்றை இவர்களே தயாரிக்கின்றார்கள்.

ஆகவே, இவ்வாறான குடிசை கைத்தொழில்கள் எமது பண்பாட்டு அடையாளமாக காணப்படுகின்றது இவற்றிற்கு தேவையான மூலதனங்களையும் மூலப் பொருட்களையும் வழங்கி கைவினை கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம் மாத்திரமே இக் கைத்தொழில்களை எதிர்காலத்தில் தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.



# தீபாவளி வழிபாடுகள்

உலகவாழ் இந்துக்கள், தீபாவளி திருநாளை, வியாழக்கிழமை (31) வெகு விமர்சையாக கொண்டாடினர். நமது நாட்டிலும் பல்வேறு இடங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.





ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தில்...
தீபாவளி பண்டிகையான வியாழக்கிழமை (31) காலை கொச்சிக்கடை, ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தில் ஏராளமான பக்தர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர்.















## ஹட்டனில்...

ஹட்டன் ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலயத்தில் தீபாவளி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (ரஞ்சித் ராஜபக்ஷ)





## நீர்கொழும்பில்...

நீர்கொழும்பு கடற்கரை தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் தீபாவளி விசேட பூஜை, கிருபாகரன் குருக்கள் தலைமையில் வியாழக்கிழமை (31) காலை இடம்பெற்றது. ( எம். இஸட். ஷாஜஹான்)





## புத்தளத்தில்...

புத்தளம் உடப்பு பிரதேசத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தில் தீபாவளி விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. ரஸீன் ரஸ்மின்





## இறக்குவானையில்...

இறக்குவானை டிப்பின் மாணிக்கத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் தீபாவளி விசேட பூஜைகள் இடம்பெற்றன.
சிவா ஸ்ரீதரராவ்









## தீபாவளி வழிபாடுகள்...

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளர் திருமதி அப்சாரி சிங்கபாகு திலகரத்ன தலைமையில் பம்பலப்பிட்டி மாணிக்கம் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற தீபாவளி வழிபாடுகளில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்றார்.

தமிழகம்

# சென்னையில் காற்று மாசு



சென்னையில், 3 இடங்களில் காற்றின் தரக்குறியீடு மோசமடைந்துள்ளது.

சென்னையில் எந்த ஒரு பகுதியிலும் காற்றின் தரம் நன்றாக இல்லை என, மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் 204 என்ற அளவில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளது.

இதேபோல், செங்கல்பட்டு மாவட்டத்தில் 154, கடலூரில் 148, கோவையில் 104, புதுச்சேரியில் 119 என்ற அளவில் காற்றின் தர குறியீடு மிதமான அளவில் அதிகரித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை காலை 7 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் காற்று மாசுபாட்டின் அளவு 190 ஆக தரக்குறியீட்டில் பதிவாகியுள்ளது.

அதிகபட்சமாக மணலியில் 254, அரும்பாக்கத்தில் 210, பெருங்குடியில் 201 என்ற அளவில் காற்றின் தரக்குறியீடு மோசம் அடைந்துள்ளது.

கொடுங்கையூரில் 159, மணலியில் 181, ராயபுரத்தில் 164, வேளச்சேரியில் 163 மிதமாக காற்று மாசு அதிகரித்துள்ளது.

புதுடெல்லி

## இந்திரா காந்தியின் நினைவு தினம்



முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நினைவு தினத்தை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வியாழக்கிழமை (31), மரியாதை செலுத்தினார்.

இதுகுறித்து ராகுல் காந்தி தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறப்பட்டுள்ளதாவது:-

“பண்டிட்ஜியின் இந்து, பாபுவின் அன்புக்குரியவர், அச்சமற்றவர், துணிச்சலானவர், நீதியை விரும்புபவர் - இந்தியாவின் இந்திரா!

“பாட்டி, தேசத்தின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான உங்கள் தியாகம், பொது சேவையின் பாதையில் நம் அனைவரையும் எப்போதும் ஊக்குவிக்கும்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரளா

வயநாடுஅருகே

## நிலத்தின் அடியில் சத்தம்



வயநாடு அருகே நிலத்தின் அடியில் பலமுறை சத்தம் ஏற்பட்ட வண்ணம் இருப்பதாகவும், இதனால் அப்பகுதி பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் மேப்பாடி அருகே முண்டக்கை, சூரல்மலை பகுதிகளில் கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட நிலச்சரிவு ஏற்பட்டது.இதில், 400க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்த நிலையில், நீலகிரி மாவட்டம் கூடலூர்-கேரள எல்லையில் உள்ள மலப்புரம் மாவட்டம் போத்துகல், ஆனக்கல் பகுதியில், செவ்வாய்க்கிழமை (29) இரவு, நிலத்தின் அடியில் பலமுறை சத்தம் கேட்டதாக, அப்பகுதி மக்கள் கேரள வருவாய்த்துறை, பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதிகாரிகள் விரைந்து வந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 80க்கும் மேற்பட்ட குடும்பங்களை அப்பகுதியில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றினர்.







விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 01 நவம்பர் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.